**23.01.2025**

**MCOP. No. 109/2012**

**ம.சா.1 : லதா**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் இறந்து போன சின்னசாமியின் மருமகள், 4 வது மனுதாரர். 3 வது மனுதாரர் மாதேஸ்வரியும், 3 வது எதிர்மனுதாரர் சுந்தரியும் இறந்து போன சின்னசாமியின் மகள்கள். இறந்து போன சின்னசாமியின் மகள்களுக்கும், என்னுடைய கணவர் பழனியப்பனும் திருமணமாகி தனி தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2 வது மனுதாரர் சிகப்பாயியும், இறந்து போன சின்னசாமியும் தனியாக குடும்ப அட்டை பெற்று வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2) நான் தனியாகவும், மாமியாரும் தனியாக வசித்து வருகிறார்கள். 5 வது மனுதாரர் பொன்மணிகண்டன் என்னுடைய மகன் அவருக்கு திருமணமாகிவிட்டது. அவர் தனியாக தான் வசித்து வருகிறார் என்றால் இல்லை. அவர் என்னுடன் தான் வசித்து வருகிறார். இறந்து போன சின்னசாமியின் மகன், மகள்கள் மற்றும் பேரன்கள் தனி தனியாக வசித்து வருவதால், சிகப்பாயி தவிர மற்றவர்கள் யாரும் இறந்து போன சின்னசாமியை சார்ந்து இல்லை (Dependants) என்றால் சரியல்ல.

3) சின்னசாமி விபத்து நடந்து 4-1/2 ஆண்டுகள் கழித்து தான் இறந்தார் என்றால் சரிதான். நான் ஒப்படைத்துள்ள டிஸ்சார்ஜ் சம்மரியில் மந்தைவெளி அருகில் சின்னசாமி நடந்து செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவருக்கு விபத்தில் ஏற்பட்ட 5 காயங்களில் 4 வது காயம் மட்டுமே கொடுங் காயம் என்று காணப்பட்டுள்ளது. மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ கல்லூரில் மருத்துவமனையில் தான் சின்னசாமி சிகிச்சை எடுத்தார் என்றால் சரிதான்.

4) இந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தில் தான் சின்னசாமி இறந்து போனார் என்பதற்கு நான் எந்தவிதமான சான்றிதழையும் நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த பின்னிட்டு சின்னசாமியின் 3 வது மகள் மாதேஸ்வரிதான் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரிலும் போலீஸ்சார் பதிவு செய்ய முதல் தகவல் அறிக்கையிலும் விபத்தானது சின்னசாமி சாலையை கடந்ததால் தான் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) விபத்து சம்பந்தப்பட்ட வழக்கில் போலீசார் விசாரித்த சாட்சிகள் அனைவரும் விபத்தானது சின்னசாமி சாலையை கடந்ததால் தான் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லிவாறு ரோட்டை கடப்பதற்கு நின்றுகொண்டு இருந்த போது விபத்து ஏற்பட்டதாக சொல்வது தவறு என்றும் சின்னசாமி சாலையை கடந்ததால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான்.

6) விபத்து ஏற்படுத்திய ஆட்டோ இடது பின் பகுதியில் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநர் மிதமான வேகத்தில் சாலை விதிகளை

அனுசரித்து வாகனத்தை மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஓட்டினார் என்றும் சின்னசாமி தான் சாலை போக்குவரத்தை கவனிக்காமல் திடீர் என்று சாலையின் குறுக்கே கடந்துவிட்டார் என்றால் சரியல்ல.

7) இந்த விபத்தானது ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது அல்ல என்றும், சின்னசாமியின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதால் ஆட்டோவிற்கு காப்பீடு செய்த நிறுவனம் விபத்திற்கு இழப்பீடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் Batch அணியவேண்டும் என்றும், அவ்வாறு அணியாமல் வாகனத்தை ஓட்டியதால் சாலை விதிகளுக்கு புறம்பாக உள்ளதால் ஆட்டோவிற்கு காப்பீடு செய்த நிறுவனம் விபத்திற்கு இழப்பீடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

8) சின்னசாமி மகள் கொடுத்த புகாரில் சின்னசாமி விவசாய கூலி என்று தான் சொல்லப்பட்டுள்ளது. சின்னசாமிக்கு விவசாய நிலம் உள்ளது என்றும் அதன் மூலம் வருமான வருவதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும் அவர் பசுமாடு வளர்த்தார் என்று சொல்லுவதற்கும் அதன் மூலம் வருமான வருவதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

9) நான் சொல்வது போல் அவர்க்கு நிலமும் இல்லை, பசுமாடும் இல்லை, அதன் எவ்வித வருமான இல்லை என்றும்அதிக இழப்பீடு கோருவதற்காக அவ்வாறு மனுவில் கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் சின்னசாமிக்கு வயது சுமார் 80-90 இருக்கும் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு அவர் உடல் நிலைசரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் வயோதிகம் காரணமாக உடல் உபாதைகள் காரணமாக நோய்களுக்கு ஆளாகி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

10) அவருக்கு ஏற்பட்ட நோய் மற்றும் வயோதிகம் காரணமாக இயற்கையாக தான் மரணம் அடைந்தார் என்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் காரணமாக இறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்பின்கீழ் கோரியுள்ள இழப்பீடுகள் மிக அதிகமானது என்றும் அதை பெறுவதற்கு எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றும், சின்னசாமியின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதால் காப்பீட்டு கழகம் விபத்திற்கு இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

11) ஓட்டுநர் மீது போடப்பட்ட குற்றவியல் வழக்கின் இறுதி நிலை என்ன என்பது குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் அதிகப்படியான நிவாரணம் கேட்டகவேண்டி முன்னுக்கு பின் முரணமாக வாக்குமூலம் தாக்கல் செய்து, அதன்

அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இழப்பீடு கோரும் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**